SKI M. KALYANASUNDARAM : சம்பந்தப்பட்டவர்கள் "க்ளெயிம்ஸ்" போடுவது ஒரு பக்கம் இருக்கட்டும். உடனே கமிஷனரிடம் இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை டெபாஸிட் செய்யவேண்டுமென்று என் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது ரயில்வேயில் வேலை செய்கிறவர்களைப் பற்றியது. இதில் என்ன விதிகள் அனுசரிக்கப் பட்டு வருகிறது என்று தெரியவில்லை.

East Coast Ports

* 464 Q.—SRI S. LAZAR (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have any proposals to improve East Coast Ports of Madras so as to make it possible for steamers to call at them and facilitate the export and import of commercial goods through these ports;

(*b*) if so, the names of the ports;

(*c*) the nature of the improvements proposed for them; and

(*d*) the period during which the improvements will be effected?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) So far as the Tuticorin Port is concerned there are adequate facilities for steamers to call at the port in large numbers. Regarding other East Coast ports schemes to facilitate the export and import of commercial goods at Cuddalore and Nagapattinam and other ports are on hand.

(*c*) The attention of the hon. Member is invited to the paper [a] placed on the table of the House.

(*d*) The improvements will be effected during the remaining period of the Second Five-Year Plan and if necessary during the Third Five-Year Plan also.

SRI A. A. RASHEED : Is it a fact that Sethusamudram Project has been given up by the Planning Commission even in the Third Five-Year Plan? If so, what are the reasons?

THE HON. SRI P. KAKKAN : We did not get such information.

SRI K. VINAYAKAM : ஸார், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்த தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்திப்படுத்துவதாக மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் தூத்துக்குடிக்கு வந்தபோது சொன்னார்கள். இதைப் பற்றி ஏதாவது மேல்நடவடிக்கை மத்திய அரசாங்கத்தோடு தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அதன் விளைவு என்ன ? அதோடு மங்களூர் துறைமுகத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று ஒரு கிளர்ச்சி இருக்கிறதே, இந்தப் போட்டியில் தூத்துக்குடி வெற்றி பெறுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திபற்றி இந்த அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே அதற்காக வற்புறுத்தி வருகிறது, பாடுபட்டு வருகிறது. 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் கட்டத்திலேயே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். அவர்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. முடிவு செய்த பிறகுதான் தெரியும்.

---

[a] Printed as Appendix I on pages 89–91 infra.

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்த தூத்துக்குடி துறைமுகத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசியிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சர்க்கார் சிபார்சு செய்தும் எடுத்துக்கொள்ளவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது மத்திய சர்க்கார் கட்டாயமாக எடுத்துக்கொள்வார்கள் என்று உறுதி கூற முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN : உறுதி கூற முடியுமா என்று கேட்பது அவ்வளவு நல்லதல்ல. நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறியிருக்கிறோம். எதிலும் நம்பிக்கைதான் இருக்க வேண்டும். நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

Sri A. VEDARATHNAM : ஸார், நாகப்பட்டிணம் துறைமுகத்தில் ஒரு "பியர்" கட்டவேண்டுமென்று வெகு நாளாக கோரிக்கை இருக்கிறதே, அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது ? அது எப்போது நடைபெறும் ?

The Hon. Sri P. KAKKAN : இதற்குத் தனி கேள்வி வேண்டும்.

Sri K. ANBAZHAGAN : தூத்துக்குடி துறைமுகத்தை மிக விரைவாக எடுத்து நிறைவேற்றப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி தேர்தலின்போது தூத்துக்குடி மக்களுக்கு வாக்களித்தார்கள். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : வாக்குறுதிகளை காங்கிரஸ் அரசாங்கம் நிறைவேற்றுகிற மாதிரி வேறு எந்த அரசாங்கமும் நிறைவேற்றமுடியாது. வேறு எந்த அரசியல் கட்சியும் நிறைவேற்றாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். நம்பிக்கையோடு இருக்கிறோம். வெற்றி பெறுவோம் என்று நினைக்கிறேன்.

Sri R. KRISHNASAMI NAIDU : கீழ்க்கரை துறைமுகங்கள் வரிசையில் கீழக்கரை, தொண்டி என்பவைகளும் பரிசிலனைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : கிழக்குக் கரையில் இருக்கக் கூடிய துறைமுகங்கள் எல்லாம் சேரும்.

Sri S. LAZAR : தூத்துக்குடி துறைமுகத்தை சிவில் போர்ட்டாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஒரு திட்டம் இப்போது அரசாங்கத்திடம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் சமீபத்தில் அதைப் பரிசீலனை செய்த நிபுணர்களால் கொச்சியை நேவல் போர்ட்டாக அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக தூத்துக்குடியையே அபிவிருத்தி செய்யலாம் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதைப் பற்றி இந்த அரசாங்கம் வற்புறுத்துகிறதா ? நேவல் போர்ட்டாகவும் இந்த தூத்துக்குடி அபிவிருத்தி செய்யப்படுமா ?

The Hon. Sri P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றித் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Police tattoo

* 465 *Q.*—**Sri M. P. SARATHI :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை போலீஸ் நூற்றாண்டு விழாவில் செய்துகாட்டிய "டாட்டு" காட்சிகளை ராஜ்யத்திற்கு வெளியே உள்ள பெரிய நகரங்களிலும் செய்து காட்ட ஆலோசிக்கப்பட்டதா ?

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS